ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1990/7 - 2016 ඔක්තෝබර් මස 24 වැනි සඳුදා - 2016.10.24

*1990/7 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் மக்குல் எல்ல நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் அமுக்க உந்தும் நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஒற்றோபர் 17.
5/2/2/1219.

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில், இல.70, பம்பரகம கிராம அலுவலர் பிரிவில், பம்பரகம எனும் ஊரில் அமைந்துள்ள பம்பரகம அம்பிட்டிகொடவத்தை எனும் காணியின் மொத்த பிரமாணத்திலிருந்து 10 பேர்ச்சஸ் வரையான கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இக்காணியின் மீதித் துண்டு ; |
| கிழக்கு | : | பம்பரகம வீதி; |
| தெற்கு | : | இக்காணியின் மீதித் துண்டு ; |
| மேற்கு | : | இக்காணியின் மீதித்துண்டு. |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* தலைவர்,
காணி சுவீகரிப்பு ஆணையம்,
கிரகரி மாவத்தை,
கொழும்பு 07.

11 - 417

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச் சபையிடம் பிரேரிக்கப்பட்டுள்ள மாத்தறை IV ஆம் கட்ட நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு நிலையம், களஞ்சிய தாங்கி, நிர்வாகக் கட்டிடம், இயந்திர நிலையம், உந்தும் நிலையம் மற்றும் உத்தியோகபூர்வ விடுதியினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஒற்றோபர் 17.
5/2/2/1252.*

**அட்டவணை**

*மாத்தறை மாவட்டத்தில், மாலிம்பட பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 350A, கட்டுவன்கொடை கிராம அலுவலர் பிரிவில் கட்டுவன்கொடை எனும் ஊரில் அமைந்துள்ள கட்டுவலகேவத்த மற்றும் புஞ்சிஹாமிலாகே கொரட்டுவ எனும் காணியில் இருந்து சுமார் 03 ஏக்கர், 02 றூட் மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஹோன்பலஹேன மற்றும் எலோகந்த வத்த காணி ; |
| கிழக்கு | : | எலோகந்த வத்த காணி மற்றும் பிரதான வீதியில் இருந்து கட்டுவன்கொடை வரையான வீதி ; |
| தெற்கு | : | கட்டுவன்கொடை வரையான வீதி மற்றும் பேருவலகே வத்த காணி ; |
| மேற்கு | : | இஹலகேவத்த மற்றும் கொட்டபலகேவத்த காணி. |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* 1. திரு. என். பீ. பலிஹவடன மற்றும்
திரு. ராமசிரி பலிஹவடன,
பங்களாவ,
மாலிம்பட வீதி,
கத்துவ - தெளிஜ்ஜவில.

*11 - 418*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.